## 18. தலைப்பு 16 – பாராளுமன்றம்

---

### 18.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---

பாராளுமன்றத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| கணனி, கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| வாகன நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்பக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவுக் கைநூலின் 5.2.1 இல் காண்பிக்கப்பட்ட மாதிரிப் படிவம் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பொருள் பதிவேட்டுப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 454(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 44 ஆவது பொது மாதிரிப் படிவம் | நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. |

**18.2 கணக்காய்வுச் சான்றுகள் இன்மை**

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் அதற்குரிய விபரங்களுக்குத் தேவையான சான்றுகள் பாராளுமன்றத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 25,000,000 கூட்டுத் தொகைக்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பெற்றோர் வழியில் ஆட்சேர்த்தல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பாராளுமன்றத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் உரித்து மற்றும் இருப்பு என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான கையேற்றல்களுக்குரிய கடிதங்களின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**18.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்**

---------------------------------------------------------------------

பாராளுமன்றத்திற்கு மீளாய்வாண்டின்போது சமர்ப்பிக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை.

**18.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

----------------------------------

**18.4.1 பாதீட்டு முரண்கள்**

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 50,300,000 மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இருபது செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன்

பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 18.5 பொது வைப்புக் கணக்குகள்

------------------------------------------------------

இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 242,800 கூட்டுத் தொகையான 06 வைப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 18.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

------------------------------------------------------------------------------------------------------------------------------------

01601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,693,395 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 19 வருடங்கள் வரையிலான கால வீச்சினைக் கடந்திருந்த போதிலும் அந்த மீதிகளை அறவீடு செய்யும் பின் தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ஆ) 2004 ஆம் ஆண்டு முதல் ஓய்வு பெற்ற மற்றும் மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 529,019 கடன் மீதி 11 வருட காலமாகத் தொடர்ந்திருந்தபோதும், அந்த மீதியை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1995 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்துவரும் சேவை விலகிய உத்தியோகத்தரின் ரூபா 947,096 கூட்டுத் தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏனைய கடன் மீதியின் கீழ் 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்துவரும் ரூபா 121,540 நிலுவை மீதியை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**18.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

தகைமைபெற்ற உத்தியோகத்தர்களை நியமித்து உள்ளகக் கணக்காய்வு பிரிவை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**18.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அலுவலகத்தினால் 2015 மே 31 ஆந் திகதியளவிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2011 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

பாராளுமன்றத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்குக் குறைந்த தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 38,395,040 ஆகும்.

**18.9 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 137 | 5,088,424 | அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் 09 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 262(2) மற்றும் 262(3) | - | செலுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுக்குரிய உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களில் செலுத்தப்பட்டது என்ற முத்திரை இடப்பட்டிருந்த போதிலும், அதில் செலுத்தப்பட்ட திகதி மற்றும் சிற்றொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 772(3) | - | பொருள் ஏல விற்பனையின்போது விற்பனை செய்யப்பட்ட சகல பொருட்களும் திணைக்களத்தின் பொருட் பதிவேடுகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| (i) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.13 ஆம் பந்தி | 436,230 | உத்தியோகபூர்வ வாகனங்களைப் பழுதுபார்க்கும்போது கராஜின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகளின் நியாயமான தன்மை தொடர்பாக தகைமைபெற்ற இயந்திரப் பொறியியலாளரின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2007 மே 11 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1(iii) ஆம் பந்தி | | ஓய்வூதியகாரர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல் 12 மாத காலத்திற்கு வரையறுக்கப்பட வேண்டிய போதிலும் 4 ஓய்வூதியக்காரர்கள் அந்த எல்லையை விஞ்சி மீண்டும் சேவையில் ஈடுபத்தப்பட்டிருந்தனர். |
| (iii) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | | ஐம்பத்தேழு உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கைகள் உறுதிப்படுத்தப்படாமல் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) | 2 (iv) ஆம் பந்தி | 2,488,240 | வருகை மற்றும் வெளிச் செல்கை உறுதிப்படுத்தப்படாமல் 55 உத்தியோகத்தர்களுக்கு பாராளுமன்றக் கூட்டம் நடாத்தப்பட்ட ஆகஸ்ட் மாதத்தின்போது 05 நாட்களுக்கு ரூபா 750 வீதம் போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (v) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | 206,250 | பதினான்கு உத்தியோகத்தர்களுக்கு செலுத்தக்கூடிய ஆகக்கூடிய இடர்கடன் தொகையான ரூபா 250,000 எல்லையை விஞ்சி இடர்கடன் செலுத்தப்பட்டிருந்தது. |

## 18.10 வங்கிக் கணக்குச் செயற்பாடுகளில் உள்ள குறைபாடு

---

பாராளுமன்ற உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு மேலதிகமாக ஏனைய 03 வங்கி நடைமுறைக் கணக்குகளில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 19,457,910 மீதி காணப்பட்டது. பாராளுமன்றத்தால் 2014 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த ரூபா 201,761 பெறுமதியான 10 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 18.11 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பாராளுமன்றத்தில் 67 உத்தியோகத்தர்களைக் கொண்ட பொறியியல் திணைக்களமொன்று இருக்கையில், வெளித்தரப்பினருக்கு ரூபா 851,200 செலுத்திப் பாராளுமன்றக் கராஜின் பகுதியொன்றை இரு கூறாக்குவதற்கும் பிரிப்பதற்காகவும், ரூபா 331,109 தொகை அந்தத் தரப்பினருக்கே செலுத்தி பாராளுமன்றத்தின் கடிதங்களைப் பகிர்ந்தளிக்கும் உத்தியோகத்தர்கள் இருக்கும் அறைக்கு 2 கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருந்தன.

(ஆ) நீதிபதிகளின் மாதாந்தப்படி என்ற பெயரில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற உத்தியோகத்தர்களுக்கு 2012 யூலை மாதம் முதல் 2014 யூலை மாதம் வரை வீட்டு வாடகையாக ரூபா 443,613 ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் மாதாந்தம் ரூபா 18,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. பாராளுமன்றப் பதவியணியினர் மதியுரைக் குழுவிற்கு படிகள் தொடர்பான நிதிப் பிரமாணத்தைத் தயாரிப்பதற்கான அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பான நிதிப்பிரமாணம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 18.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரசாங்க கொடுப்பனவு வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 250,000 இனை விஞ்சுகின்ற வேலைகளுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதிக் கையொப்பமிடப்பமிட வேண்டுமாயினும், ஞாபகார்த்த காட்சிக் கூட அறையை

நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்கு உரிய தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.2(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் போட்டியாளர் விலை ஒப்பீடின்றி பாராளுமன்றப் பதவியணியினர்களுக்காக தனியார் நிறுவனமொன்றிலிருந்து 39 சேலைகளும் 39 மீற்றர் லைனிங் துணியும் ரூபா 160,680 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்
------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின்போது பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது பின்வரும் அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 282,100,000 நிதி ஏற்பாட்டிலிருந்து பொதுத் திறைசேரியின் அனுமதியின்றி, உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு மேலதிகமாகவுள்ள ஏனைய வங்கிக் கணக்குகளுக்கு அந்த நிதி ஏற்பாடு மாற்றப்பட்டு அந்த மாற்றங்கள் செலவினமாக திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருந்தன. மாற்றப்பட்ட இப் பணம் 2 வங்கிகளில் 4 நிலையான வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டு அந்த நிலையான வைப்புக் கணக்குகளில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 212,952,795 மீதி காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டின்போது நிலையான வைப்பு முதிர்ச்சியடைந்தமையால் ரூபா 58,451,845 2014 ஆம் ஆண்டின்போது வைப்பு முதிர்ச்சியடைந்தமையால் ரூபா 32,433,369 தொகையும் மீளப் பெறப்பட்டிருந்தன.

(ii) மேற் கூறப்பட்ட மீதிக்கு மேலதிகமாக ஏனைய 4 நிலையான வைப்புக் கணக்குகளில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 75,201 ஸ்டேர்லின் பவுண் மற்றும் 301,010 ஐக்கிய அமெரிக்க டொலர் மீதிகள் என்பன காணப்பட்டன. இது தொடர்பாகத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 18.13 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

---

பாராளுமன்றத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறைகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் சீராக்கங்கள் மேகொள்ளப்படாத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| வருடம் | பந்தி இலக்கம் | |
| 2013 | 1.3(ஆ) | கணக்காய்விற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை |
| | 1.3(ஊ)(iii) | வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய 16 வருடங்களிலும் கூடிய பழைமை வாய்ந்த ரூபா 91,990 கடன் மீதியை அறவிடுவதற்கோ அல்லது புத்தங்களிலிருந்து அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 1.3(ஊ)(iv) | அங்கத்தவர் கடன் பதிவேட்டில் உத்தியோகத்தர்கள் பெற்ற கடன் வகைப்படுத்தப்பட்டுக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| | 1.5(அ) | 2013 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 1.6(அ)(i) | பாராளுமன்றப் பதவியணியினருக்கு வருடாந்த சம்பள அதிகரிப்பிற்கு மேலதிகமாக 10 சம்பள அதிகரிப்புகள் வழங்கப்பட்டிருந்தது. |
| | 1.6(அ)(i) | பாராளுமன்ற பதவியணியினருக்கான சம்பளம், படிகள் மற்றும் விடுமுறைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 1.6(அ)(ii) | நிறுவனத்தால் முறையான ஆட்சேர்த்தல் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | 1.8 | பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறுகின்ற நாட்களில் பி.ப 6.30 மணிக்குப் பின்னர் சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துக் கஷ்டத்தைக் கருத்திற்கொண்டு செலுத்தப்படுகின்ற போக்குவரத்துப்படியானது உத்தியோகபூர்வ வாகன வசதிகள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் செலுத்தப்பட்டிருந்தது. |
| 2011 | 1.5(அ)(i) | பாராளுமன்றப் பதவியணியினது மதியுரைச் செயற்குழுவின் அங்கீகாரமின்றி பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளரினால் மூன்று உத்தியோத்தர்களுக்கு வருடாந்த சம்பள ஏற்றத்திற்கு மேலதிகமாக 14 சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருந்தது. |

## 18.14 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 55 | 52 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 150 | 133 | 17 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 207 | 183 | 24 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 470 | 454 | 16 | - |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 73 | 78 | 02 | 07 |
| | மொத்தம் | 955 | 900 | 62 | 07 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த மிகை ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பில் முறையான அங்கீகாரத்தைப் பெறுவதற்குப் பாராளுமன்றம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.